1150

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - MAR 1957
MADRAS

1150
1, 57

முல்லைக் கொடி

சான்றாண்மை இதழ் - குருகுலத் தாள்

[வெள்ளிக் கிழமையில் கிழமைப் பதிப்பு]

ஆசிரியர்: இளவழகனார்

கிளை	துன்முகி, தை 5வ.	தளிர்
9	18-1-'57	14

9-ம் ஆண்டுக்கையொப்பம்
(14-10-56 முதல்)

உள்நாடு	ரூ.	4 0 0
வெளி நாடு	ரூ.	6 0 0
தனித் தாள்	ரூ.	0 1 0
ஆயுள் - கையொப்பம்	ரூ.	100 0 0

முகவரி:

குருகுலம்,
மதுராந்தகம் (அஞ்.);
செங்கற்பட்டு மாவட்டம்:
தமிழ்நாடு.

நின்னது குற்றம் உளதோ?

மடவரல் கொழுந! மூத்த பிள்ளையார் முருகர்க்குத் தந்தையே! நின்னை நினைந்து எண்ணருங் கோடியாகிய பழவினைத் துன்பங்களை எளிதிற் கடந்து, கூற்றுவன் ஆற்றலை அழித்து, இறப்பையும் பிறப்பையும் கடந்து, சிறப்புமிக்க விண்ணுலகத்துக் காமதேனுவின் கன்றைப் போன்று களித்துத்திரியும் பேறு எளிதிற் பெற்று மகிழாமல் தீவினையால் வருந்தி இடர்ப்படும் பாவிகள் அத்துன்பங்களைத் தாமே தேடிக் கொண்டவரல்லவா! **நின் குற்றம் என்று சொல்லத் தகுந்தது ஏதும் இல்லையே!** இதனை எண்ணும் போது, கீழ் வரும் எடுத்துக்காட்டுகள் தோன்றுமல்லவா!

முனைமுறியாத வெள்ளரிசியும் முப்பழங்களும் கலந்து அறுசுவையும் பொருந்த அடிசில் சமைத்து வேண்டும் போது இனிதில் உண்ணுதற்கு எளிதாக அமைத்திருக்கும் போது அதனைப் புசியாத ஒருவன் பசியால் வருந்துதல் அவ்வுணவின் குற்றமன்று!

வெயிலில் வைத்துச் சூடேற்றியும் வெப்பந்தீர ஆற்றியும் வெட்டிவேர் முதலிய பொருள்கள் விரவியும் அமைத்த மணம் நிறைந்த இன்னீர் கையருகில் இருப்பவும் அதனை உண்ணாது ஒருவன் தாக மிகுதியால் துடித்து வருந்தல் அத்தெளிந்த நீரின் குற்றமன்று!

இடமகன்று, தேன்துளிக்கும் நறுமலர்ப் பூங்கொத்துகள் நிறைந்து விளங்கும் வெண்மணல் விரிந்த குளிர்ந்த பசு மரச் சோலை நிழல், வழியில் இருப்ப, அதிற் சிறிது தங்கி இளைப்பாறிச் செல்ல எண்ணாமல், வெட்ட வெளியில் கோடை வெயிலில உடலெல்லாம் வெயர்வு சொட்டச் சொட்ட நடந்து செல்வோன், மெலிந்து வருந்தல் அந்த நிழலின் குற்றமன்று!

— பட்டினத்தார்.

''என் கடன் பணிசெய்து கிடப்பதே''

''யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா''
—புறநானூறு.

முல்லைக் கொடி

கிளை	துன்முகி, தை	தளிர்
9	18-1-57	14

எதிர்கால - - - - நம்பிக்கை

'அளவுக்கு மீறினல் அமிர்தமும் நஞ்சு' என்பது நம் சான்ருேர் பெருமக்கள் அனுபவ வாயிலாக அறிந்துரைத்த முதுமொழி.

எந்தச் செயலிலும் அளவாக நடந்து கொள்ள வேண்டும் என்பது அத்தொடரின் கருத்து.

பிற எந்தச் செயலுக்கு இந்தப் பழமொழி பொருத்தமானுலும் விஞ்ஞான அறிவு வளர்ச்சிக்கு மட்டும் இதுபொருந்தவே பொருந்தாது என்று மக்கள் கருதினர்கள்.

எனவே, விஞ்ஞான அறிவு வளர்ந்ததுநாளுக்கொருஆராய்ச்சியும் காலத்துக்கொரு புதிய கண்டுபிடிப்புமாக விஞ்ஞானம் வளர்ந்தது.

பருப் பொருள்கள் ஐந்தும் ஐந்நூருயிரம் வகையில் மக்கட்குப் பயன்படலாயின. நீரும் நிலனும் வானும் வளியும் தீயும் மக்களின் அறிவாட்சியில் அடங்கிய குடிமக்கள்போல அவர்கள் ஏவலின் வழி ஒழுகின.

புகைவண்டி. வானூர்தி போன்ற பலவகை 'நவீன'க் கண்டுபிடிப்புகள் நாட்டில் நாகரிகத்தை வளர்த்தன. நாட்டோடு நாட்டை நணுகவைத்தன. சேய்மையை அண்மையாக்கின. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பழமொழியை நடைமுறையில் உண்மையாக்கின.

ஆனுல் அளவுக்கு மீறிவளர்ந்த அல்லது வளர்க்கப்பட்ட விஞ்ஞான அறிவு இன்று உலகத்தையே நாசமாக்கும் அளவுக்கு வந்து விட்டது.

அணுக்குண்டு, நீர்வாயுக் குண்டு என்றெல்லாம் கண்டு பிடித்தது, விஞ்ஞான ஆராய்ச்சியின் வெற்றி என்று வல்லரசு நாடுகள் இன்று எண்ணிமகிழ்கின்றன.

இத்தகைய அணுக் குண்டு நீர்வாயுக் குண்டுகளால் எதிர்காலம் என்னவாகும். உலகத்தின் எதிர்காலத் தலையெழுத்து யாது? என்ற சிந்தனை போர் வெறியில் சித்தம் குழம்பிய வல்லரசினர்க்குச் சிறிதும் தெரியவில்லை.

அறிஞர் திரு. சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்கள், சென்ற ஆவடிக் காங்கிரஸின் போது இந்தநிலைமையைத் திட்ட வட்டமாக விளக்கிக் கண்டித்திருப்பதை நம்மவர் மறந்திருக்க மாட்டார்கள். பல்லைப் பிடுங்காத விஷ நாகத்தை வளர்த்துத் தலை மாட்டில்வைத்துக் கொண்டு உறங்கும் பேர்வழிகளைத்தாம் அவர் அத்தகைய வல்லரசுகளுக்கு உவமைகாட்டியிருந்தார். அணுக்குண்டைப் போரிற் பயன்படுத்துவதற்கு உலகமெங்கும் பேரெதிர்ப்புகள் தோன்றியுள்ளன.

நாட்டில் யுத்தம்ஏன்தோன்றுகிறது? ஒரு வல்லரசு மற்ருெரு நாட்டை வென்று தன் ஆட்சியின் கீழ்க் கொணர வேண்டும் என்ற பேரவாவினுல் அல்லவா?

இவ் வெண்ணம் முற்கால யுத்தங்களால் ஒருவேளை முற்றுப் பெறலாம். ஆனுல் விஞ்ஞான வளர்ச்சியால் இன்று பயமுறுத்தும் அணுக்குண்டு யுத்தங்களால் இது சாத்தியமா?

இல்லவே இல்லை. அணுக்குண்டு மின்னல் வேகத்தில் உலகத்தைப் படு சூரணப்படுத்தும் போது எதிர்ப்பவர் மட்டும், அவர்க்குப் பழைமையாக இருந்த நாடுமட்டும் பாழாகாமல் எஞ்சி நிற்கும் என்பது என்ன நிச்சயம்? இதில் வெற்றி தோல்வி ஏது? ஆக்கம் அழிவும் ஏது? எல்லாம் வெறும்பாழ் என்னும் சூனிய நிலையில் உலகம் ஆனபின் ஆயிரக் கணக்கான ஆண்டுகட்குப் புல்பூண்டு கள்கூட முளைக்காத வெறுந்தரையாக, இன்று ஆராய்ச்சிக் கண்ணுற் காணும் மக்கள்வாழ இயலாத செவ்வாய் மண்டிலம் போன்றல்லவா இவ்வுலகம் மாறிவிடும்!

ஆகவே அணுக்குண்டு கண்டுபிடிப்பு, அதனுல் ஏற்படும் அச்சம் அனைத்தும் ஆராய்ந்த அறிஞர்கள் உலகில் எதிர் காலத்தில் நிலையான சமாதானம் ஏற்படலாம் என்று உறுதியாக எண்ணுகின்றனர்.

உலக சரித்திரப் பேராசிரியர் திரு ஆர்னல்டு டாய்ன்பி என்பவர், அண்ணுமலைப் பல்கலைக்கழகம் சாஸ்திரியார் மன்றத்தில்

7-ம் பக்கம் பார்க்க)

48 பாவி – பாவச்செயல்மிக்கவன். வீழ்த்தினர் – போக்கினர்.

49 பண்பு – சிறப்பு, அறைவோம் – சொல்லுவோம்.

50 ஒண்மணி செய்வள்ளம் – ஒளிபொருந்திய மணிகளால் ஆன பொற்கிண்ணம்.

51 எண்ணமுடன் – சிந்தனையோடு, விளம்பும் – சொல்லுவான்.

52 கேண்மோ – கேட்பாயாக, நீணிதி-பெருஞ்செல்வம், காமர் – அழகிய.

53 மாழ்கி -- வருந்தி, மாற்றம் -- பதிலுரை, என்னே -- யாதாகுமோ, குன்றும் - துன்புறும்.

54 மல்லல் -- வளம்பொருந்திய.

55 குடம்பை -- பறவைக் கூடு, கவின் -- அழகிய.

56 சேக்கை -- படுக்கை, மதர் -- கொழுத்த, காமரம் -- ஒருவகைப்பண், தாது -- மகரந்தம், விள்ள -- மலர, ஆலும் -- ஒலிக்கும், ஆதர மந்தி -- விருப்பமுள்ள பெண் குரங்குகள்.

57 கண்விழிக்க -- முகம் மலர, தடம் -- தடாகம், திருநலம் -- அழகிய நிறம், கண்ணயர - குறைய.

58 ஏல்வை--சமையம், வியங்கான்--பெரியகாடு, செவ்வி - அழகு.

59 அனுமானம் - அடையாளம், வெள்கும் -- தோற்கும், நகைமணிமாடம்-ஒளிவீசும் மணிகள் இழைத்த மாளிகை.

17 முற்றுவிப்போர் – செய்துமுடிப்பவர்; நலியிருள் – துன்பம் செய்கின்ற இருள்.

18 காரிருள் – கருமை மிக்க இருள்; கானெறி – காட்டு வழி; ஞானச் சீரியன்–ஞானச் சிறப்புடையவன்; ஞான்று –சமையம்.

19 இளவளஞாயிறு – காலையிளஞ் சூரியன்; தளவு – முல்லை; வளமயில்......இளவல் – முருகனைப்போன்ற இளைஞன்: இருந்தவன் - மிக்க தவமுடையவன்.

20 கனிமதி – முழுநிலாவை ஒத்த; காண்டக–காட்சிக்குரியதாக; முனிவிலாது – வெறுக்காது; முரணிலான்– மாறுபாடில்லாத தவசி.

21 அடிகளே – சுவாமிகளே; நவில் – பொருந்திய, விளங்கிய, முயக்கற – கூட்டம் அறும்படி; கேள்வித் தொடையவர் – கேள்விச் செல்வம் பொருந்தியவர்; சூழுவான் – சேர்வதற்கு.

22 பான்மையர் – குணமுடையவர்; மலைவுறும் – தடுமாற்றம் தரும்; மையல் வெள்ளம் – அஞ்ஞானப் பெருக்கு; ஈடற – சேர்க்கை ஒழிய.

23 குன்றுநழ் – குன்றை ஒத்த; பொன்தவழ் – பொன்மயமான.

24 வியன் நெறி – பெரிய வழி; புடையில் – பக்கத்தில்; ஓவியம் – சித்திரம்; மாவியல் – திருமகள் வாசம் செய்யும்.

25 யாக்கை – உடல்; தங்கி விடிவதன்முன் எழுவது என்று அவர் சிந்தித்திட்டார் என்க. எய்தினர் – எய்தி (முற்றெச்சம்).

27 அருக்கியம் – அதிதிகட்குச் செய்யும் உபசாரங்களுள் ஒன்று; நீர்கொண்டு பாத பூசை செய்தல்; பையுள் – துன்பம்.

28 பாரித்து – மிகுதியாக; கிளை – சுற்றம்; செய்யவன் – செம்மை பொருந்திய இளைஞன்.

29 குவளை முகங்குவிதல், கமலம் வாயவிழ்தல் என்பன கதிர் வரவினை உணர்த்துவன; வளை – சங்கு; ஆவு மாவும் – பசுக்களும் ஏனைய விலங்குகளும்; ஓகை – மகிழ்ச்சி.

30 சால்பும் – மேம்பாடும்; செல்லுங்காலை – செல்லும் போது; கரவால் – களவினால்; காமர் பொலங்கலம் – அழகிய பொற்கிண்ணம்.

31 வெம்பசி – கொடிய பசி.

32 கொன்றனை – அழித்தாய்; துன்றல்இல் – நெருங்குதல் இல்லாத.

33 பேரஞர் – பெரிய துன்பம், செய்தலும் – செய்வதற்கும்.

34 எழுமை யெழுபிறப்பும் உள்ளுவர் தங்கண் விழுமந் துடைத்தவர் நட்பு – திருக்குறள்; வித்தகர் – சான்றோர்

35 முரணில் – மாறுதல் அற்ற; தாய வேள்பொரும் முருகனை ஒத்த, அம்மா – வியப்பிடைச் சொல்

36 கதழ்எரி – கனலும் எரி, வான்மறுகில் – வானவீதியில்; பானு – சூரியன்,

37 முகில்கள் – மேகக் கூட்டங்கள்; தோயம் – நீர் துனைந்து – விரைந்து.

38 கருவிமாமழை – தொகுதியான கரிய மேகக்கூட்டம்; திருவனார்கள் – திருமகளொத்த மகளிர், வெள்ளப்பெருக்கின் காட்சி, காடே உருகி ஓடுவதை ஒத்தது. உலப்பிலா– ஓயாத.

39 பொன் அவா(வு)ம் – திருமகள் விரும்புகின்ற; புத்தெழில் – புதிய அழகுடைய.

40 அமைந்தனம் தங்கி – அமைந்துதங்கி (முற்றெச்சம்) கூடுவம் – சேர்வோம்; குறித்தார் – நினைத்தார் நல்வழி, கொண்டு கூடுவம் என்க.

41 நவமாளிகை – புதிய மாளிகை; செப்பினர் அழைத்தார் – சொல்லிக் கூப்பிட்டனர் (முற்றெச்சம்).

42 விளித்து-அழைத்து, அலமந்து எய்த்தார்-சோர்ந்து வருந்தினர், கலைதவழும் – சித்திரவேலைப்பாடு மிகுந்த; கருத்துடன் – ஆழ்ந்தகருத்துடன்.

43 நினையாது–வந்தோர் நிலையைச் சிறிதும் எண்ணாமல்.

44 கலைவல்லான் – முனிவன். நச்சுகிலேம் – விரும்ப மாட்டோம். ஞான்று – சமையம்; புக்கழைத்தேம்-வந்து அழைத்தோம்; புரையோய் – உயர்ந்தோனே.

45 துன்று – தொடர்ந்த; துயக்கில்லா – குற்றமில்லாத; ஒதுக்கம் – ஒதுக்கமான ஓரிடம்.

46 சாம்பினர் – வாடினர்; மால் உலாம் – அறியாமை மிகுந்த; ஏலும் – பொருந்தும்; ஆதவன் – கதிரவன்.

47 துறுமழை – அடர்ந்த மழை, புல்லியன் – அற்பன் சென்னெறி – செல்லும்வழி

கலைப் பகுதி – உள வலிமைக்கு (முன் தொடர்ச்சி)

தமிழர் மருத்துவக் கலை

(TAMILIAN MEDICAL SCIENCE.)

(தமிழாக்கம் சி. து. க.)

வேறு இடங்களில் இருந்த மருத்துவச் சுவடிகளிற் பெரும்பாலானவை கறையான்களுக் குணவாயின. எஞ்சியவை ஒவ்வோராண்டுநவராத்திரிமுடிவிலும் ஆற்று வெள்ளத்தில் மூடபக்தியின் காரணமாக எறியப்பட்டொழிந்தன. எத்தனையோ கலைச் செல்வங்கள் அறிஞர்களின் நுண்மாணுராய்ச்சிகள் அனைத்தும் இத்தகைய மூடப் பழக்க வழக்க வெறிகளுக்கு இரையாகி மறைந்தன.

கடைச் சங்க காலத்துக்குப் பின்னர், அதாவது கி. பி. முதல் நூற்றுண்டுக்குப் பின்னர் எத்தனையோ காரணங்களால் மருத்துவக்கலை கவனிப்பாரற்றுச் சீரழிந்தது. கடல் கோளால் ஏற்பட்ட தீங்கினை

'ஏரணம் உருவம் யோகம்
இசைகணக்(கு) இரதம்
[சாலம்
தாரணம் அறமே சந்தம்
தம்பம்நீர் நிலம் உலோகம்
ஆரணம் பொருள்என் றின்ன
ஆனநூல் யாவும் வாரி
வாரணம் கொண்ட தந்தோ
வழிவழிப் பெயருமாள

என்ற பழந்தமிழ்ச் செய்யுள் ஒருவாறு விளக்குகின்றது. இம்மாதிரி தமிழ் நூல்களில் பெரும்பாலானவை அழிந்து போன காரணத்தால், மருத்துவக்கலையில் தமிழ் மாந்தர் பெற்றிருந்த ஆற்றலும் கலை மாட்சியும் அளந்தறியக் கூட வில்லை.

தஞ்சைப் பெருஞ் சோழர்களில் கடைசி வேந்தன் என்று சொல்லத்தகும் மூன்றுங் குலோத்துங்கன் காலத்திய கல்வெட்டுக்கள், அவனுல் மருத்துவக்கலை சிறப்பாக வளர்க்கப் பெற்றது என்று தெரிவிக்கின்றன.

என்றும் இறவாப்புகழ் வாய்ந்த திருக்குறளில் ஆசிரியர் திருவள்ளுவனுர் மருத்துவக் கலைக்கென்று தனி அதிகாரம் ஒன்று அமைத்துள்ளார். இவ்வதிகாரத்துக்கு '**மருந்து**' என்று பெயர் சூட்டியுள்ளார். இவ்வதிகாரத்தில் உள்ள குறட்பாக்களில் உள்ள சொற்களும் விரிந்த கருத்துக்களை உள்ளடக்கிச் சொற் செட்டுடன் திகழ்கின்றன. பல மருந்துச் சரக்குகளைச் சேர்த்துச் செய்த மாத்திரைகள் போல் விளங்குகின்றன. குறள் மொழிகளையும் பாக்களையும் ஆயுந்தொறும் ஆழ்ந்து விரிந்து மருந்து நூற்கலையின் பழைய வரலாற்றினைத் தெளிவு படுத்துகின்றன.

'மருந்து' என்பது மூன்று பொருள்களில் விளங்குகிறது. 1 மருந்து 2 இரணமருத்துவம் 3 பிள்ளைப் பேற்று மருத்துவம் என்பனவாம் இதனைக் கருதியே ஆசிரியர், பொதுவாகத் தம் அதிகாரத்துக்கு '**மருந்து**' என்று பெயர் சூட்டினுர். இதனுல் திருவள்ளுவர் காலத்தில் தமிழ்நாட்டில் இம் மூன்றுபிரிவுகளும் மிகச்சிறந்த நிலையில் விளங்கி வந்தன என்பது புலனுகின்றது. மருந்து, இரணமருத்துவம், பிள்ளைப் பேற்று மருத்துவம் என்னு மூன்றும் நெடுங் காலத்துக்கு முன்பே தமிழர்களாற் கையாளப்பட்டு வந்தன என்றும் விளங்குகிறது.

திருவள்ளுவனுர், தம் ஒப்புயர்வற்ற திருக்குறளில் '**மருந்து**' என்னும் அதிகாரத்தின் முதற் பாடலில்

'மிகினுங் குறையினும்
நோயசெய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று'

என்று கூறுகின்றுர். இதில் **நூலோர்** என்ற சொல், மருத்துவக்கலை ஆராய்ச்சியில் துறை போன நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த மருத்துவ நூலோர் என்ற பொருள் தருகிறது. அதாவது, மேற் குறிப்பிட்ட மூன்றுவகை மருத்துவத்திலும் தலை சிறந்த அறிஞர் பலர் அந் நாட்களில் இருந்தமையை அம்மொழி தெரிவிக்கின்றது.

'நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று' என்று ஆசிரியர் குறிப்பிட்டதை உற்று நோக்கின், அவர், தமக்கு முன் வாழ்ந்திருந்த மருத்துவ நூல் அறிஞர் பலர் ஆராய்ந்து இயற்றிய நூல்கள் பலவும் ஆழ்ந்து கற்றுத் தம் திருக்குறளில் நுட்பமாகச் சுருக்கி உரைத்தாரென்று தோன்றுகிறது. அவ்வதிகாரம் 8வது குறட்பா,

'நோய்நாடி நோய்முதல்
நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்'

என்று வருகிறது.

முதன் முதலாக நோய் இன்னதென்று ஆராய்ந்து. பின் நோய்க்குரிய காரணத்தைத் தெளிந்து, அதன்பின்னர் நோய் பற்றறும் படியான பொருத்தமான மருந்து கொடுத்தல் வேண்டும் என்பது இக் குறளின் பொருள்.

தமிழ் நாட்டில் அநேக இடங்களில் நாடியைப் பார்த்து நோய் இன்னதென்று ஆராய்ந்து கூறும் அறிஞர்கள் பலர் இருக்கிறுர்கள். நோயை மட்டும் நாடி வாயிலாக அவர்கள் அறிந்து கூறுவர். நோய் தணிக்கும் மருந்தினை அவர்கள் கூற இயலாது. அவர்கள் 'நாடி நூல்' ஒன்றில் மட்டும் வல்லவர்கள். (வரும்)

தொழில் பகுதி — உடல் வலிமைக்கு

உழவு

— முத்து. வடிவேல் —

இப்பரந்த உலகில் முதன் முதல் நாகரீகத்தின் முதற் படியை எட்டிப் பிடித்தவர்கள் ரோமானியர்கள் என்றும்... இல்லை ...இல்லை கிரேக்கர்களே என்றும்... வரலாற்று அறிஞர்கள் போட்டியிடுகின்றனர். மற்றும் சிலர் யாவற்றினும் முற்பட்டது திராவிடர் நாகரீகமே என்றுகாரணம்காட்டியும் வாதிடுகின்றனர். நாகரீகத்தின் முதற்படியில் கால் வைத்தவர் யாவராயினும் அவர்கள் முன்னேறியதற்கு முதற்காரணம் உழவேயாகும்.

காய், கனி, கிழங்குகளை அருந்தியும், விலங்கினங்களோடு விலங்கினங்களாய்த் திரிந்தும், விலங்கினங்களையே வேட்டையாடித் தின்றும் உயிர் வாழ்ந்த மக்கள் இனம் நாகரீகம் எய்துதற்குக் காரணமாய் இருந்தது உழவுத் தொழிலே. முதன் முதல் மக்கள் இனம், விலங்கினங்களோடு போரிட்டு அல்லல் ஏற்பதைவிடக் கிடைத்தகாய்க்கனிகிழங்குகளைத் தின்று உயிர்வாழ முற்பட்டது. தமக்கு விருப்பமான காய், கனிகள் போதுமான அளவிற்குக் கிடைக்காத காலங்களில் அவற்றிற் கேற்ற மரஞ் செடி கொடிகளைப் பயிரிட்டு வளர்க்கக் கற்றனர். இதுவே உழவின் ஆரம்ப நிலையாகும்.

உழவுத் தொழிலில் பண்டைய முறைக்கும் இன்றைய முறைக்கும் எவ்வளவோ வேறுபாடுகள் உண்டு. இதுவோ விஞ்ஞான வளர்ச்சிக்காலம். எதைச் செய்ய வேண்டுமாயினும் யந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆயினும் முதன் முதல் நாகரீகம் எய்தியதாகக் கூறும் தமிழ் நிலத்தின் நிலை பிற நாடுகளைக் காட்டிலும் மிகமிகக் கீழ் நிலையிலேயே உள்ளது. இதற்குக் காரணங்கள் பல உள்ளன. அவற்றை ஈண்டு ஆராய்வோம்.

நம் நாட்டில் உழவுத் தொழில் செய்பவர்கள் பெரும்பாலும் கல்வி அறிவற்றவர்களே. ஒரு குடியில் பிறந்த மக்களில் சிலரைக் கல்வி பயின்று உத்தியோகம் செய்யவும் பலரைப் பயிர்த் தொழிலை மேற் கொள்ளவும் பெற்றோர்களே பிரித்துவிடுகின்றனர் என்பது கண் கூடு. அறிவற்ற மக்கள் செய்யும் தொழில், வளர்ச்சி யடையாததில் வியப்பென்ன? உழவு செய்பவருக்குக் கல்வி ஞானம் அவசியமன்று எனக் கருதுகின்றனர்.

உழவன் ஒவ்வொரு பொருளின் இயல்புகளையும், வேறுபாடுகளையும், பலவகை நிலங்களின் இயல்புகளையும் அறிந்திருக்க வேண்டும். இன்ன மண்ணில் இன்ன பயிர் நன்றாக விளையும் என்று தெரிந்திருக்க வேண்டும். ஒரு நிலத்தில் பயிர் செழித்து வளராததன் காரணங்களைத் தெரிந்து கொள்ளும் சக்தி அவனுக்கிருக்க வேண்டும். அப்போதுதான் அந்நிலத்தைச் சீர் செய்து பயிரிட்டுப் பலன் காண முடியும்.

"அகல உழுவதைவிட ஆழ உழு" என்ற பழமொழி நம்நாட்டில் உலவி வருகிறது. அதன்படி நிலத்தை ஆழ உழுகிறார்களா? ஆழ உழுதால் மண் கீழ் மேலாகப் புரண்டு வளமாக்கப் படுகிறது.

மேலை நாடுகளில் நிலங்கள் பெருவாரியாக உள்ளன. இயந்திரங்களைக் கொண்டு உழுது பயிர் செய்ய வசதியாக உள்ளது. நம் நாட்டிலோ நிலங்கள் துண்டு துண்டாக உள்ளன. நிலத்திற்குச் சொந்தக்காரர்களோ மிகவும் ஏழைகளாக இருக்கின்றனர் என்று சிலர் காரணம் கூறலாம். நம் நாட்டில் மக்களின் தொகைக் கேற்ற நிலம் இல்லையென்பது உண்மை தான். ஆனால் நம் நாட்டை விடப் பெருத்த அளவில் மக்கள் தொகையும் குறைந்த அளவில் நிலப் பரப்பையும் உடைய ஜப்பான் தேசத்தில் உற்பத்தி பெருவாரியாகஇருப்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். (வரும்)

மொழிப் பகுதி — அறிவு வலிமைக்கு

தமிழ் நாடு

— அருணை கார்மேகனார் —

தமிழர்நாடே! எமதுநாடு
தனித்த நாடடா!
குமரிமுதல் மாலின்குன்றம்
எல்லைக் கோடடா!
இமயம்சென்று கல்கொணர்ந்த
தெங்கள் நாடடா!
அமிர்தமாகும் வாழ்வுதேவர்
குறளைப் பாடடா! 1

எட்டுத்திக்கும் கப்பல்ஓட்டி
எதிர்த்த நாடடா!
அட்டிஇன்றிச் செல்வமளித்த
அன்னை நாடடா!
மட்டில்லாத நிதிகள்நதிகள்
மலைகொள் நாடடா!
கட்டபொம்மன் வீரம்கொண்டு
காத்த நாடடா! 2

உண்மையுண்மை எங்கள்நாடு
உயர்ந்த நாடடா!
பண்ணின்கவிதை பாரதியார்
படைத்த நாடடா!
பெண்ணின்கற்பைப் பேணிக்காக்கும்
பெருமை நாடடா!
மண்ணில்என்றும் அடிமைஇல்லை
மகிழ்வில் ஆடடா! 3

தலைகொடுத்துக் கொடைவளர்த்த
தாய்மை நாடடா!
அலைந்தகொடிக்குத் தேர்அளித்த
அண்ணல் நாடடா!
மலைந்தகன்றுக்கு மகனைஇழந்த
மன்னன் நாடடா!
கலைகொடுத்து மயிலைக்காத்த
கன்னி நாடடா! 4

கையிழந்தும் பொற்கைகொண்டு
காத்த நாடடா!
தையல்ஔவை பாடல்நெய்யைத்
தந்த நாடடா!
மெய்யறுத்துப் புறவிற்கீந்த
வேந்தன் நாடடா!
கையிலிட்ட ஆழிதந்த
கன்னி நாடடா! 5

Phone: 55034 Tel. Enkaya

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்.
53. கிடங்குத் தெரு., சென்னை 1.

மணித் திரள்

(இராமகிருஷ்ணர்)

ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் ஒருவன், போர்க்குச் செல்லவோ, விருந்துண்ணவோ, சிற்றின்ப சுகங்களில் ஈடுபடவோ விரும்புவானா? அங்ஙனமே இறைவன் பக்தியில் ஆழ்ந்தோர் ஐம்புல இன்பங்களை எண்ணமாட்டார்கள்.

* * * *

கண்களை மூடினாலொழியப் பழக்கப் பெறாத குதிரைகள் ஓரடிகூட எடுத்து வையா. அதைப் போல இச்சைகளை அடக்கா விட்டால்இறைவனைக் காண முடியாது.

* * * *

பணிப் பகுதி – உணர்வு வலிமைக்கு

உழைப்பின் உயர்வு

— அமுதா கந்தசாமி —

விடியற்காலை ட் மணி ஐந்திற் கெழுந்த நான் சற்று வெளியே தலைகாட்டலாம் என்று வெளியே வந்தேன்.

“கொத்து மல்லி! கொத்து மல்லி” என்ற குரல் என்னைத் திரும்பிப் பார்க்கச் செய்தது. மோகனப் புன்னகையுடன் சங்கரன் நின்றிருந்தான்.

“டீச்சர்! கொத்து மல்லி வேண்டுமா?” என்றான். அவன் என் வகுப்பு மாணவன். நானும்வாங்கினேன்; நிறையவே போட்டான். ஆயினும், நான் அளவாக எடுத்துக் கொண்டு “இங்கேயேஇருடா”என்று கூறி, உள்ளே சென்று வைத்து விட்டுக் கையில் காலணாவுடன் வெளியே வந்தேன். என்னைப்பார்த்தவுடனே சங்கரன் நகரத் தொடங்கினான்.

காலணாவை அவன் கூடையில் போட்டபடியே அவனை நோக்கினேன். அழகாகச் சுத்தம் செய்யப்பட்ட சட்டையும் நிஜாரும் அழகளித்தது. சுருளான அவன் கேசம் துள்ளி நெற்றியில் விழுந்தது. கள்ளமற்ற புன்னகையும் முத்துப் பற்களும் ஒளியிட்டன.

“நீ தினமும் விற்கிறாயா?”

“ஆமாம் டீச்சர்”

“யார் கற்றைகளாக்கிக் கட்டுவது?”

“நான் தான்?”

“எப்போது படிப்பாய்?”

“இரவெல்லாம் கட்டுக் கட்டுவேன். விடியற்காலையில் எழுந்து படித்து விட்டுக் குளித்து விட்டு விற்கின்றேன்.”

இதனைக் கேட்டதும் அவனை அணைத்துமுதுகில் தட்டுவதைவிடப் பாராட்டும் முறை வேறொன்று இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. என் பாராட்டு அவனைப் பூரிக்கச் செய்தது. காலணாவை என்கையில்வைத்துவிட்டு நகர்ந்தான். மீண்டும் வற்புறுத்திக் கொடுத்தனுப்பி விட்டு உள்ளே வந்தேன். வேலை என்னை விடவில்லை. சிந்தனை ஓடியது. வகுப்பில் முதல்வன் சங்கரன். வயிற்றுக்குக் கொத்து மல்லி விற்கிறான். உழைப்பையும் கல்வியையும் ஒருங்கே கற்கும் அவனுக்கு நிச்சயமாக நல்ல எதிர்காலமுண்டு. உழைப்பு மனிதனை உயர்த்துகிறது. அதன் மூலம் மனிதன் அடையும் உயர்வு நிலையானது.

உழைப்பின்றி ஒருவன் வயிறு புடைக்கத் தின்றாலும் அவன் உடல் வேண்டுமானால் வளருமே தவிர நிச்சயமாக அறிவு வளராது. ஆனால் உழைப்புடன் அதன்பரிசாகஅரை வயிறு உண்டாலும் உடலும் உள்ளமும் ஒருங்கே வளர்ந்து பெருமை யளிக்கின்றது.

ஒருமுறை ஒரு பெண், ஒரு பணக்காரர் வீட்டிற்குச் சென்றாள். மணமாகி ஓராண்டு ஆன பிறகு அவள் போயிருந்தாள். எனவே அவர்கள் “உன் தலைப்பொங்கலுக்கு உன் கணவர் என்ன பரிசு கொடுத்தார்” என்று கேட்டனர். அதற்கு அவள் உழைப்பு தான்” என்றாள். பரிதாபத்துடன் அவளை ஏறிட்டுப் பார்த்தவர்கள் திகைத்தனர். ஏன்என்றால் அதைச் சொல்லிய போது அவள் முகத்தில் மகிழ்ச்சி துள்ளியது. “என் தாய் வீட்டில் வேலையே செய்ததில்லை. இப்போது உழைப்பின் மேன்மையை எனக்கறிவித்த என் அன்புத் தெய்வம் என் கணவர். இதைவிட மனிதரான அவர்என்னபெரியபரிசைத் தர முடியும்?” என்றாளாம்.

இத் தத்துவத்தை உணர்ந்துதான் ஔவை ‘வரப்புயர’ என்று வாழ்த்தினள் போலும். வரப்புயர நீர் உயரும்; நீர் உயர நெல் உயரும்.

நல்ல பலனும் உயர்ந்த வாழ்வும் காண உழைப்பு அவசியம். ‘தோட்டியென உழைத்துத் துரையென உண்’ என்பது முதுமொழி.

ஔவை, வள்ளுவர், இளங்கோ, பாரதியார் போன்ற அறிஞர் பெருமக்கள் பெருகி நாடு முன்னேற வேண்டும்.

அறிவிலும் ஆற்றலிலும் உயர்ந்த மக்களால் தான் சிறந்த கலைச் செல்வங்களை உலகிற்களித்து உலகவாழ்க்கையை உண்மை வாழ்க்கையாக்க முடியும். இப்புனிதமான பணியில் எல்லோரும் பங்கேற்று முன்னேற விழைவோமாக.

* * *

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

10ந் தேதி நடைபெற்ற மாநாட்டில், அணுச் சக்தி நாட்டு வரலாற்றில் ஒரு புதிய வியத்தகு மாற்றத்தை உண்டாக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாம் உலகத்தில் உயிர்களையே அழித்துச் சரித்திரத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருபவர்கள் என்பதைவிடப் போரே நாட்டில் தலைகாட்டாத ஒரு பொற்காலத்தை ஆரம்பிக்கும் முன்னோடிகள் என்று பெயர் எடுக்கக் கூடும், என்று அவர் குறிப்பிட்டார்.

மனிதன் ஆராய்ச்சியின் முன்னேற்றத்தைக் காட்டும் அணுக்குண்டு சக்தி வேறு பிற வாழ்க்கை வசதிகட்குப் பயன்படும். இதுவரை மனிதன், வாழ்க்கைத் தேவைக்குத்தான் புதிய கண்டு பிடிப்புகள் உதவிவந்தன. அம்மாதிரியே அணுச் சக்தியும் பயன் படாமல் என்றும், இனி யுத்தமே நாட்டில் தலைகாட்டாத நல்லதொரு மாற்றமும் தோன்றக் கூடும் என்றும் அவர் கருதுகிறார்.

அறிஞர்களின் ஆய்வுரைகள் நாளுக்கு நாள் இம்மாதிரி வளர்ந்துகொண்டு வருவது போர் வெறிகள் நாட்டில் மறைந்து அமைதியும் அன்பும் வளர்வதற்கும் மனிதவாழ்வுக்கு ஆக்கமான சூழ்நிலை அமைவதற்கும் ஏற்ற துணை செய்யும் என்று நம்புவோமாக!

— சி. து. க.

குருகுலத்திற் சேர விரும்புவோர்க்கு!

குருகுலத்தின் ஆசிரியர் நலங்களோடு கலந்து பழகவிரும்புவோர், நாடு மொழி சமயம் இனம் முதலிய எவ்வகை வேறுபாடுங் கருதாமல் இருபாலாரிலும் சேரலாம். அவரவரும் தத்தம் இருப்பிடத்தில் தத்தம் தொழிலில் இருந்து கொண்டே இக் குருகுலத்தின் நலங்களைப் பெறலாம். விரும்பினால், இயன்ற நேரங்களில் ஆசிரியரைச் சந்தித்துக் கொள்வதும் நல்லது,

பின்வருங் கொள்கைகளும் செய்கைகளும் அவர்களுக்கு இருக்கவேண்டும்.

நிலைய குரு: ஆசிரியர் திரு. இளவழகனார்.

கொள்கைகள்:

1. அகவினப் பண்பு:—புலால் மறுத்த மரக்கறியுணவு கொள்ளுதல்.

2 உரிமை வாழ்வு:—அவரவர் தாய்மொழி தாய் நாட்டு உரிமை கடமை முதலியவற்றிற் கருத்தாயிருத்தல்.

3. பொதுமை யுணர்வு:—யாவரோடும் பகையில்லாத உள்ளத்துடன் பழகுதல்.

4. நன்மை நிறைவு:—உடல் உரமட்டுமன்றி, மனநலம், அறிவு வளம், உயிரிரக்கம், திருவருள் என்பனவும் பெறுமாறு முயலுதல்.

5. நெறிப்பட்ட உள்ளம்:வாழ்க்கையைநாளுக்கு நாள் வளர்ச்சி முகமாக்கிக் கொண்டு உயர்தல்.

செய்கைகள்:

1. மனமொழி மெய் ஒன்றச் செய்தல்:—சொல் வேறு, செயல் வேறு, நினைவு வேறுயில்லாமல் ஒழுகுதல்.

2. மெய்மையும் இனிமையுமாய்ச் செய்தல்:—இயற்கைக்கு மாறுகாமலும் இனிமை பயக்கும் வகையிலும் செய்தல்.

3. தொண்டுள்ளத்தோடு செய்தல்;—பிறர்க்கு நலஞ் செய்தலையே முதல் நோக்கமாக வைத்து முயற்சி மேற்கொள்ளுதல்.

4. இயல்பாய்ப் பரவுமாறு செய்தல்:—ஓராண்டில் ஐவர்க்கும் குறையாத தகுதியாளர் மேன் மேலும் தாமே பெருகுமாறுஒழுகுதல்போல்வது.

5. சார்ந்து கூட்டுறவாய்ச் செய்தல்:—ஆசிரியரின் கருத்து வழி நிற்றல்.

இக் கொள்கைகளிலும் செய்கைகளிலும் உறுதியுடையோர் மாணவராகவும் முடிந்தவற்றை முடிந்த அளவில் கடைப்பிடிப்பவர் அன்பராகவும் மற்றும் ஆர்வலராகவும் சேரலாம்.

விவரங்களுக்கு:

துணைவர், குருகுலம்,

குருகுலச் செய்தி:

மாணவர் இல்லம் உணவகத்திற்கு ஒரு நாள் செலவு ரூ. 20-0-0 (சிலர் மேலும்) ஏற்று அன்புடன் உதவியவர்கள்

(இவர்களுக்கு ஓராண்டுக்கு முல்லைக் கொடி தொடர்ந்து இலவசமாக அனுப்பி வைக்கப் பெறும்.

	(11-1-57 இதழ்வரை) முன்வரவு	350-0-0
18	திரு. எம். வி. நடேச அய்யர் அவர்கள், 2, அரங்கைய செட்டியார் தோட்டத் தெரு, (27-1-57) மயிலாப்பூர், சென்னை-4 ...	20-0-0
19	திரு. பி. வி. கந்தசாமி முதலியார் அவர்கள் தோல் வியாபாரம், சின்ன சேலம் போஸ்டு, விழுப்புரம் வழி, தென்னாற்காடு மாவட்டம் ...	20-0-0
20	திரு. ப சி. முத்துசாமி அவர்கள், பண்ணை பத்து சந்து, அம்மன் கோயில் தெரு, சின்ன சேலம் போஸ்டு, தென்னாற்காடு மாவட்டம்	20-0-0
21	திரு. டாக்டர் மு வரதராசனார் அவர்கள், தமிழ்ப் பேராசிரியர், (பச்சையப்பன் கல்லூரி) 5, செல்லம்மாள் தெரு, அமைந்தகரை. சென்னை 29	20-0-0
	ஆக மொத்தம் வரவு ரூ......	430-0-0

12-1-57- வரை பிடி அரிசி வரவு விவரம்

பெயர்		அரிசி வரவு படி.	ஆ.	அரிசியுடன் ரொக்கம் வரவு ரூ	அ	பை
வள்ளியம்மாள்	சென்னை	2	0			
விசாலாட்சியம்மாள்	,,	1	1	0	8	0
முனியம்மாள்,	,,	0	4			
கனகாம்புஜம்மாள்	,,	1	0			
ருக்மணீ அம்மாள்	,,	1	3			
சந்திராபாய் அம்மாள்	,,	1	4			
சோமசுந்தரம்,	,,	1	0			
பத்மாவதியம்மாள்	,,	1	0			
புஷ்பவல்லியம்மாள்	,,	1	0	0	7	6
பாலாம்பாள்	,,	2	0			
நவநீதம்மாள்	,,	2	0			
நாகரத்தினம்மாள்	,,	1	0			
தி. சந்திராபாய்	,,	1	0			
இராஜாம்பாள்	,,	1	0			
தமிழரசி	,,	1	0	0	5	0
சி. எஸ். சகுந்தலா அம்மாள், சென்னை		2	0			
எஸ். இராதாபாய்	,, ,,	1	4			
ஆகமொத்தம் வரவு		22	0	1	4	6

ஆசிரியர் விரிவுரைகள்:

(நடக்க இருப்பன)

சென்னை:

20, 27-1-57 ஞாயிற்றுக் கிழமை மாலை 6-00 மணிக்குச் சென்னை, சென்னமல்லிகேஸ்வரர்கோயிலில், 'பெரிய புராணம்' விரிவுரை

* * * *

பிடி அரிசி இயக்கத்தில் மேற்கொண்டு சேர்ந்துள்ளார் பட்டி.

(குருகுல மாணவர் திரு. கந்தசாமி அவர்கள் வழி)

திருவெண்ணெய் நல்லூர்.

திரு கே. விநாயகம் மனைவியார் திருமதி விருத்தாம்பாள்
திரு கே. குமாரசாமி மனைவியார் திருமதி ரங்கநாயகி அம்மாள்
திரு பி. சுப்பிரமணியன் மனைவியார் திருமதி தெய்வயானையம்மாள்
திரு கே.வீரக்கவுண்டர்மனைவியார் திருமதி பவுனம்பாள்.
திரு பலராமன் மனைவியார் திருமதி தனலட்சுமி அம்மாள்

சென்னை:

திருமதி பாக்கியலட்சுமி அம்மாள்,
,, ஆபரணம் அம்மாள்
,, கனகம்மாள்
,, பி. சி. பொன்னுரங்கம் அவர்கள்.

நற்றுணை நற்சங்கம்

* * * *

திரு. சாம்பசிவ செட்டியார் அவர்களிடமிருந்து வரவு
6. ஆச்சாரப்பன் தெரு, சென்னை 1.

(2படி துவரம்பருப்பு - 1வீசை சர்க்கரை - 10 பலம் காப்பித்தூள்)

* * * *

ஆர்வலர் சேர்க்கை

ஆண்டுக் காணிக்கை ரூ 5-0-0 செலுத்திக் குருகுலத்தில் ஆர்வலராகச் சேர்ந்துள்ளார் பட்டி. இவர்களுக்கு ஓராண்டுக்கு முல்லைக் கொடி தொடர்ந்து இலவசமாக அனுப்பி வைக்கப் பெறும்.

	(11-1-57 இதழ் வரை) முன் வரவு ரூ	170
35	திரு டி, பி. அழகர், சென்னை. 5.	5
36	சி. எஸ் கிருஷ்ணமூர்த்தி, சென்னை	5
37	டி. மோகனன், சென்னை 24	5
38	லிங்கம் அண்டு கம்பெனி, சென்னை 1.	5
39	பி. கே. சவுந்தரராசன், சென்னை 3.	5
40	வே. வி. முத்து சென்னை 3.	5
41	பி. எஸ். ஜெயசந்திரன், சென்னை 1.	5
42	எம். விட்டல் ராவ், சென்னை.	5
43	சி. சிவசங்கரன், சென்னை 21.	5
44	எஸ். சுப்பிரமணியம். சென்னை.	5
45	தேவ்சந் எம். ஷா, சென்னை 7	5
46	திரு ஏ. ஸ்ரீராமுலு நாயுடு, சென்னை 3.	5
47	கே. இராமச்சந்திரன், சென்னை 7.	5
48	வி ரங்கநாதன், கோடம்பாக்கம்	5
49	ஷா டிம்பர் டிரேடிங் கம்பெனி	5
50	கே, பி, அலுப்பி, சென்னை 21	5
51	எஸ். எம். மதுரை, சென்னை ..	5
52	எம். எஸ். கிருஷ்ணசாமி, சென்னை.	5
53	பி. கன்னையா பிரசாத் அண்டு கோ,	5
54	கே. எஸ். கோவிந்தராஜுலு சென்னை.	5
55	ராம் அண்டு கோ, சென்னை. 1	5
56	எம். சாமிநாதன், புரசை.	5
	ஆகமொத்தம் வரவு ரூ.	280

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்,
குருகுல அச்சகம், மதுராந்தகம் (அஞ்சல்); செங்கற்பட்டு மாவட்டம்: தமிழ் நாடு.